DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 185/2024 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **முத்து லட்சுமி** |
| Husband Name | : | துரைராஜ் |
| Village | : | பில்லாம்பட்டி |
| Taluk | : | சிங்கம்புணரி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 35/2025 |

**(வழக்கின் 1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 29.04.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது பில்லாம்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் அனைவரும் என் கணவர் துரை என்ற துரைராஜின் தம்பிகள் ஆவார். சாட்சி முருகன் எனது மகன். சாட்சி ராஜகுமார் என்பவரை தெரியும். பில்லாம்பட்டியில் உள்ள கருப்பர்கோவிலுக்கு பக்கத்தில் எனது மாமனார் அமைத்து கொடுத்த பம்பு செட் உள்ளது அதில் எனது கணவரும் மற்ற எதிரிகளுக்கும் பொதுவாக உள்ளது . அந்த பம்பு செட்டிலிருந்து தண்ணீர் எடுப்பதற்காக பைப் மற்றும் பீஸ் கட்டைகள் வாங்கி போட்டார். நாங்கள் முறை தண்ணீரை போடும்போது தினமும் எதிரிகள் இருவரும் தகராறு செய்வார்கள். இது சம்மந்தமாக நாங்கள் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கு தற்போது நடைபெற்று வருகிறது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மதியம் 3.30 மணியளவில் நானும் எனது மகன் முருகன், மகள் சின்னம்மா மற்றும் எனது

ஆண்டிச்சி ஆகியோருடன் எனது வீட்டில் இருந்தோம், எனது கணவர் வெளியே சென்று விட்டார். அப்போது ராஜகுமார் என்பவர் என்னிடம் வந்து எனது கணவரை கருப்பர் கோவில் அருகே எதிரிகள் இருவரும் வெட்டிவிட்டதாக என்னிடம் சொன்னார் அவ்வாறு சொல்லிக்கொண்டு இருக்கும்போதே எதிரிகள் இருவரும் வண்டியில் எங்கள் வீட்டிற்கு வந்து எனது மகனையும்,மகளையும் வெட்ட வந்தார்கள். மேலும் வண்டியிலிருந்து இறங்கி கடப்பாரை மற்றுமஅருவாள்வைத்திருந்தார்கள். எதிரி கருப்பையா என்பவர் என் மகனை அருவாளால் வெட்ட வந்தபோது என்னையும் அசிங்கமான வார்த்தையால் திட்டினார்கள் நானும் ஓடிப்பார்த்தேன் நான் ஓட முடியாமல் எதிரி முருகேசன் என்பவர் கம்பியால் எனது தலையிலும் கையிலும் அடித்தார். நான் உடனே மயக்கம்போட்டு கீழே விழுந்துவிட்டேன். அதன்பிறகு எனது மகனும் ராஜகுமார் என்பவரும் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் அதன்பின்னர் திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் திருச்சி மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரிக்க வந்தார்கள் அப்போது நான் புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆகும். நான் திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்தபோது எனது கணவரும் இருந்தார் அவருக்கு கழுத்து, தலை மற்றும் கையில் காயங்கள் இருந்தது. எதிரி கருப்பையா தன்னை அருவாளால் வெட்டியதாக என் கணவர் என்னிடம் சொன்னார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.29 10:35:15 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.